*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*05 08 2026 WEDNESDAY 6 30 PM*
*வணக்கம்-மாநிலச்செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

*1) நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.*

*2) திரைப்படங்கள் சட்டவிரோதமாக இணையதளங்களில் வெளியிடப்படுவதை தடுப்பதற்கான சட்ட நெறிமுறைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*3) தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*4) தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை வரவேற்றும், குறை கூறியும் பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் கருத்து தெரிவித்துள்ளன.*

*5) இந்தோனேஷியா ஓப்பன் Taekwondo போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.*

*>>>>><<<<<*

*நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் பிஜேபியைச் சேர்ந்த 37 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், காலை உணவின் போது கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*நாள்தோறும் ஒரு மணி நேரமாவது நாடாளுமன்ற நூலகத்தை உறுப்பினர்கள் பயன்படுத்த வேண்டுமென்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.*

*>>>>><<<<<*

*திரைப்படங்கள் சட்டவிரோதமாக இணையதளங்களில் வெளியிடப்படுவதை தடுப்பதற்கான சட்ட நெறிமுறைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதற்கு ஏதுவாக சட்டங்கள் திருத்தப்பட்டிருப்பதாக கூறினார்.*

*திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை நடைபெறும் என்று பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அறிவித்துள்ளார்.*

*இன்று சென்னையில் தமது தலைமையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*>>>>><<<<<*

*தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில், புதிய திட்டங்கள் குறித்த அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளதாக நிதித்துறை செயலர் திரு. சித்திக் கூறியுள்ளார்.*

*சட்டப்பேரவையில், இன்று தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் - சித்திக் 60 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை வரவேற்றும், குறை கூறியும் பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் கருத்து தெரிவித்துள்ளன.

மாநிலத்திற்கு தேவையான புதிய தொலைநோக்கு திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பான எவ்வித அறிவிப்பும் இந்த பட்ஜெட்டில் இடம்பெறவில்லை என்று குறை கூறியுள்ளார்.

வருவாயை பெருக்குவதற்கான வழிமுறைகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை என்று அஇஅதிமுக கருத்து தெரிவித்துள்ளது.

புதிய அறிவிப்புகள் இல்லாத பட்ஜெட் இது என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

இந்த நிதிநிலை அறிக்கை ஏமாற்றமளிப்பதாக உள்ளது என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.
செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அம்சங்கள் இதில் இடம்பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள மக்கள்நல திட்டங்களுக்கான அறிவிப்புகள் வரவேற்கத்தக்கது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் கூறியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், மக்கள் பெரிதும் எதிர்பார்த்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

தமிழக அரசின் பட்ஜெட் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யவில்லை என்று இந்திய கம்யனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் கூறியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், சில பிரிவுகளில் முன்னேற்றம் காண்பதற்கான அம்சங்கள் இருந்த போதிலும், பட்ஜெட்டின் பெரும்பகுதி ஏமாற்றமளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

த.வெ.க அரசின் நிதிநிலை அறிக்கை, சமச்சீரான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று மதிமுக பொதுச்செயலாளர் திரு. வைகோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுத்துச் சென்று, வெற்றித் தமிழகம் என்ற இலக்கை உறுதி செய்வதற்கான அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

சேவை உரிமைச் சட்டம், நீர்ப்பாசன திட்டங்கள், செயற்கை நுண்ணறிவு திறன் நகரம், முதியோர் பொழுதுபோக்கு மையங்கள் போன்ற அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளது வரவேற்கத்தக்கது என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கல்வித்துறைக்கான நிதி குறைக்கப்பட்டிருப்பதும், வேலைவாய்ப்புக்கான புதிய அறிவிப்புகள் இடம்பெறாததும் ஏமாற்றமளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த பட்ஜெட்டில் சிறு குறு தொழில்துறைக்கு 2 ஆயிரத்து 142 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று மதுரை மடீசியா செயலாளர் திரு. அசோக் கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழில் முதலீடுகளை ஊக்குவிக்க இது வகை செய்யும் என்று தெரிவித்தார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் உள்ள டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் மதுபானங்களுக்கு ரசீது வழங்க வேண்டும் என்று டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த நீதிபதி திரு. இளந்திரையன் இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

இந்த உத்தரவை அமல்படுத்தியது தொடர்பான அறிக்கை வரும் 7ஆம் தேதி தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த வழக்கின் விசாரணையும் அன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர். வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>><<<<<

<u>மாவட்டச் செய்திகள்</u>

திருப்பத்தூர் மாவட்டத்தில் நுகர்வோர் உரிமைகள் தின விழா விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திரு. ரவிக்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறையை ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் உலக தாய்ப்பால் வாரவிழா நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாகன சேவையை ஆட்சியர் திருமதி. சினேகா இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

மேட்டூர் அணைக்கான நீர்வரத்து வினாடிக்கு 18 ஆயிரத்து 905 கனஅடியாக அதிகரித்துள்ளது.

>>>>><<<<<

கோயம்புத்தூரிலிருந்து - ஜெய்ப்பூருக்கு வரும் 13ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 3ஆம் தேதிவரை வியாழக்கிழமை தோறும் சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>><<<<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

இந்தோனேஷியா ஓப்பன் *Taekwondo* போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.
ஆடவர் 54 கிலோ எடைப்பிரிவில் *Harman Gill*-ம், மகளிர் 73 கிலோ எடைப்பிரிவில் *Etisha Das*-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.
இப்போட்டியில் இந்தியா 2 தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை கைப்பற்றியது.

>>>>><<<<<

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Ashmita Chaliha* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.
மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 22-20, 21-18 என்ற செட்கணக்கில், ஜப்பானின் *Ririna Hiranoto*-வை வென்றார்.
இதர மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்று *Rakshitha Sree* மற்றும் *Mansi Singh* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

**கலப்பு இரட்டையர் பிரிவில் *Sruti Mishra - Ishaan Bhatnagar* இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.**

***>>>>>END<<<<<***